1979 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நீலகிரி மாவட்டத்தில் வாழும் மலைவாழ் மக்களின் கலை, பண்பாடு களை விளக்கும் வகையில் ஊட்டியில் ஒரு கலைக்கூடம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஊட்டி சம்பந்தப் பட்ட பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர் ஊட்டி மாவட் டத்தைச் சேர்ந்தவரா?

ஒட்டர் சமூகத்தைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

* வினா எண். 857—

திரு. இரா. தாமரைக்கனி:
திரு. து. புருஷோத்தமன்:
திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டர் சமுதாயத்தைத் தாழ்த்தப்பட்டோர் பட்டி யலில் சேர்க்கும்படி அரசுக்கு கோரிக்கை ஏதும் அண்மையில் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) ஆம்.

(ஆ) அது மத்திய அரசிற்கு, தகுந்த நடவடிக்கைக்கு, அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று 'ரெகமண்டு' பண்ணி மத்திய சர்க்காருக்கு அமைச்சர் அவர்கள் அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் துரிதமாக மத்தியச் சர்க்காருடைய முடிவைப் பெற்றால், அவர்கள் இதுபற்றி பதில் சொல்வதற்கு ஏதுவாக

இருக்கும். ஆகவே, அதைத் துரிதப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஓர் இன மக்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று சொன்னால், அதை மத்திய அரசாங்கம்தான் செய்ய வேண்டும். மாநில அரசைப் பொறுத்த வரையில் பரிந்துரை செய்கிற அதிகாரம்தான் இருக்கிறது. அதை அவர்கள் துரிதப்படுத்திச் செய்ய வேண்டும் என்று சொல்லக்கூடிய அதிகாரம் நமக்கு இல்லை. அது அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட விவகாரம்.

திரு. வெ. கருணாமூர்த்தி: தலைவர் அவர்களே, இருளர் சமுதாயத்தைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இருளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து இதுவரையில் எந்தக் கோரிக்கையும் வரவில்லை. அவர்கள் இப்போது மலைவாழ் இனப்பட்டியலில் இருப்பதாக அறிகிறேன். தாழ்த்தப்பட்ட பட்டியலில் சேர்க்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. தற்போதே அவர்களுக்கு எல்லா சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டர் சமுதாயத்தை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு பரிந்துரை செய்து மாநில அரசு மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாக சொல்லப்பட்டது. இதே ஒட்டர் சமுதாயத்தினரை போயர் சமுதாயத்தினர் என்றும் சொல்வதுண்டு. ஆகவே இந்த போயர் இனத்தவரையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதோடு, இருளர், குறவர் இந்த இனத்தவர்களையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஒட்டர் சமுதாயத்தினரை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்தது. அதை இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறது. முடிவு எடுக்கவேண்டியது மத்திய அரசே தவிர மாநில அரசு அல்ல.

1979 ஏப்ரல் 27]

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, ஓட்டர் சமுதாயத்தைப் போலவே தமிழகத்தில் நலிந்து கிடக்கின்ற பல்வேறு சமுதாயங்கள் இருக்கின்றன. குறிப்பாக வேடர் சமுதாயம் இருக்கிறது. அது போன்ற சமுதாயங்களை எல்லாம் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு அரசு சிபாரிசு செய்து அனுப்பியிருக்கிறதா? அப்படி அனுப்பப்பட வில்லை என்றால், இப்படிப்பட்ட சமுதாயங்களை எல்லாம் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு சிபாரிசு செய்து அனுப்புவார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, வருகின்ற வேண்டுகோள்களை எல்லாம் பார்த்தால், என்னைக் கேட்டால், எல்லா சமுதாயத் தினரையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து விட்டால், ஜாதி வித்தியாசமும் ஒழிந்துவிடும், ஜாதிப் பிரச்சினையும் தீர்ந்துவிடும், கோரிக்கைகளும் நின்று விடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேடர் சமுதாயத்தைப் பற்றிக் கேட்டார்கள். இந்தச் சமுதாயத்தைப் பற்றி எந்தவித மான கோரிக்கையும் வரவில்லை.

திரு. சீ. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல காலம் பிறக்குது, நல்ல காலம் பிறக்குது என்று வீடுதோறும் பொய்ச் சொல்லிக் கொண்டிருக்கும் குடுகுடுப்பை இனத்தைச் சேர்ந்தவர்கள் நாடோடிகளாய், பொருளாதார வசதியின்றி, வீடு வசதியின்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எப்போது இவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும்? தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் உள்ளவர்களுக்கு உள்ள சலுகைகளை இவர்களுக்கும் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும் போது பிறக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஓட்டர் சமுதாயத்தை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு இந்த மாநில அரசு மத்திய அரசுக்கு ரிக்கமெண்ட் பண்ணி அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். எந்த அளவுக்கு ரிக்க மெண்ட் பண்ணி அனுப்பியிருக்கிறது என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பரிந்துரை என்ற அளவில் பரிந்துரை செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் பரிவு காட்ட வேண்டியது மத்திய அரசே தவிர மாநில அரசு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் இரண்டாவது துணைக் கேள்வியை கேட்டுத்தான் ஆகவேண்டும் என்பதற்காக சம்பந்தமில்லாத கேள்வியை கேட்பது சரியல்ல. அந்த முறையில் இந்தத் துணைக் கேள்வி பொருத்தமானது அல்ல.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, வேண்டுகோள் வந்தால்தான பரிசீலிக்கப்படும் என்ற போக்கே தவறு. நாம் ஒவ்வொருவரும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நம் கண்ணாலேயே பார்க்கிறோம், குருவிக்காரன்கள் எல்லாம் குப்பைத் தொட்டியிலிருந்து எச்சிலை எடுத்துபொறுக்கி சாப்பிட்டுக் கொண்டிருப்பதை பார்க்கிறேன். இப்படிப்பட்டவர்களை பேக்-வார்டு கிளாஸ்ஸில் தான் வைத்திருக்கிறோம். இவர்களையெல்லாம் ஷெட்யூல்டுடிரைபிலோ அல்லது ஷெட்யூல்டு காஸ்ட் என்ற இனத்திலோ சேர்க்க வேண்டியதுமிக முக்கியம். எந்தெந்த ஜாதியினர் இப்படி மிக மோசமான நிலைமையில் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் இந்த ஷெட்யூல்டு கிளாசிலோ அல்லது ஷெட்யூல்டு டிரைபிலோ சேர்க்கவேண்டும் என்று அரசே சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாநில அரசு பலவிதமான விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. யார் யார் கோரிக்கைகளைத் தருகிறார்களோ அவற்றைப் பார்த்து இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்து அனுப்புகிறது. இந்திய அரசியல் சட்டத்தில் இது போன்ற விதிமுறை இருக்கிற காரணத்தால் அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் இந்த அரசு செயல்பட முடியும்.

மடத்துக்குளம் பேரூராட்சி பேருந்து நிலையம்.

வினா எண். 858— திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உடுமலை தாலுக்கா மடத்துக்குளம் பேரூராட்சி முறையாக அமைந்துள்ள பேருந்து நிலையத்தை அங்கீகரிக்கும்படி அரசைக் கேட்டு நீண்ட காலமாகியும் அங்கீகாரம் அளிக்காமலிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் எப்போது அங்கீகாரம் அளிக்கப்படும் ? அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா ?